அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 29/2011

எனது இல: EST-9/DICIP/06/0166
அரசாங்க நிர்வாக
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07
2011.12.21

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்,

**தாபனச் சட்டக் கோவையின் II ஆம் பாகத்தின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 24:3 ஆம் உப பிரிவின் கீழ் குற்றஞ்சாட்ட்பட்ட உத்தியோகத்தரை முறையான ஒழுக்காற்று விசாரணைகளின் போது குற்றமிழைத்துள்ளதாக காணப்படுமிடத்து தண்டனைகளை விதித்தல்**

தாபனச் சட்டக் கோவையின் II ஆம் பாகத்தின் ஆம் அத்தியாயத்தின் 24:3 ஆம் உப பிரிவு தொடர்பில் உமது கவனத்தை செலுத்துமாறு வேண்டப்படுகின்றீர். அவ்வுபபிரிவுடன் பின்வரும் உபபிரிவுகளைச் சேர்த்து திருத்தியமைப்பதற்கு 20011.11.09 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

24:3:14 குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர், முறையான ஒழுக்காற்று விசாரணையின் போது தவறிழைத்தவராகக் காரணப்படுவாராயின் ஒழுக்காற்றுக் கட்டளையாக அவருக்கு விதிக்கப்படும் 24:3:1 அல்லது 24:3:2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகளைத் தவிர 24:3:3 முதல் 24:3:13 வரையான உறுப்புரைகளுடன் தொடர்புடைய தண்டனைகளைச் செயற்படுத்தும் போது, 24 தவணைகளுக்கு மேற்படாத வகையில் அறவிடக் கூடிய வகையில், 30,000 ரூபாவினைக் குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரிடமிருந்து அறவிடுதல்.

24:3:15 ஒழுக்காற்றுக் கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்ததன் பின்னர் 24:3:1 மற்றும் 24:3:2 என்பவற்றுடன் தொடர்புடைய வகையில் குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர்கள், தண்டனையுடன் மீண்டும் அரச சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டால் அல்லது ஓய்வு பெறச் செய்யப்பட்டால் மேற்படி 24:3:14 இல் குறிப்பிடப்பட்டுள்ள 30,000/- ரூபாவினை அறவிடுதல்.

ஒப்பம் / பீ.பி.அபேகோன்
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு